**சுருக்கம்**

பள்ளிக் கல்வி - 2007-2008ம் கல்வி ஆண்டில் 100 அரசு/ ஊராட்சி ஒன்றியம்/ நகராட்சி மற்றும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல்- ஆணை வெளியிடப்படுகின்றது.

---

பள்ளிக் கல்வித் (இ1) துறை

அரசாணை (நிலை) எண். 106 நாள்: 09.05.2007.

படிக்கப்பட்டவை:-

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.18933/ஜி1/ இ1/2007 நாள் 29.3.2007.

- - - - - -

**ஆணை :**

2007-2008ம் கல்வி ஆண்டில் 100 அரசு, ஊராட்சி ஒன்றிய, நகராட்சி மற்றும் மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த அரசு அனுமதி அளித்து ஆணையிடுகின்றது. இவ்வாறு நிலை உயர்த்தப்படும் உயர்நிலைப் பள்ளிகள் பொருட்டு பணியிடங்கள் வழங்கப்படுவது குறித்து பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன:-

(i). நிலை உயர்த்தப்படும் 100 உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் உள்ள நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடத்தை உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடமாக ரூ.6500-200-10500 என்ற ஊதிய விகிதத்தில் நிலை உயர்த்தப்படுகின்றது.

(ii). நிலை உயர்த்தப்படும் 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு இரண்டு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 200 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ரூ.5500-175-9000 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு தோற்றுவிக்கப்படுகின்றது.

(iii). நிலை உயர்த்தப்படும் உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் புதிதாக தோற்றுவிக்கப்படும் இரண்டு பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் ஒரு பணியிடத்தை 2007-2008ஆம் கல்வி ஆண்டிலும் மற்றொரு பணியிடத்தை 2008-2009ஆம் கல்வி ஆண்டிலும் வழங்கப்படும்.

2. பள்ளிகள் நிலை உயர்த்தப்படும் போது 1:40 என்ற ஆசிரியர்- மாணவர் விகிதம் உள்ளவாறு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. நிலை உயர்த்தப்படும் பள்ளிகளின் பட்டியல் பற்றிய ஆணை தனியாக வெளியிடப்படும். பள்ளிக் கல்வி இயக்குநர் இது தொடர்பான ஆணையினை சம்பந்தப்பட்ட

முதன்மைக்கல்வி அலுவலர்கள் மற்றும் பள்ளிக்குழுக்களுக்கு பள்ளிகளின் பெயர்களை அரசு அனுமதித்த பின்பு அனுப்ப வேண்டும்.

4. அரசாணை (நிலை) எண்.235, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24.5.97ல் பள்ளிகளைத் நிலை உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை நிலை உயர்த்தப்படும் பள்ளிகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்து கொள்ளுமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் மேலும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. அரசாணை (நிலை) எண்.1360, கல்வி, நாள் 23.9.1954ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, உள்ளூர் குழுவினரால் அவர்களது செலவில் ஒவ்வொரு பள்ளிக்கும் நிரந்தரமான கட்டடவசதி செய்து தரப்பட்டிருக்கிறதா என்பதை முதன்மைக் கல்வி அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும்.

6. நிலை உயர்த்தப்படும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் ஊதியம் குறித்த செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புக்களின் கீழ் பற்று வைக்கலாம்.:-

<u>அரசுப் பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

“2202-பொதுக்கல்வி- 02 இடைநிலைக் கல்வி- 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்- I - திட்டத்தில் சேராதது- AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்குச் சம்பளம்- 01 சம்பளங்கள்.
(த.தொ.கு 2202-02-109 AA 0108)”

<u>நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கான கணக்குத்தலைப்பு:-</u>

“2202-பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி- 109 அரசு இடைநிலைப் பள்ளிகள்- I - திட்டத்தில் சேராதது - AB நகராட்சி, மாநகராட்சி, இடைநிலை மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்- 01 சம்பளங்கள் (த.தொ.கு. 2202-02-109-AB-0106)”

7. இச்செலவினம் புது துணைப் பணித் திட்டமாகக் (New Instrument of Service) கருதப்படும். இச்செலவினம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு நாளடைவில் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும், சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். எதிர்பாராச் செலவு நிதியில் இருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.தி.பொ-I)த் துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதி (வ.செ.தி.பொ.I)த் துறைக்குத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். இச்செலவினத்தினை 2007-2008ஆம் ஆண்டு துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்குரிய கருத்துருக்களை உரிய நேரத்தில் அரசுக்கு அனுப்பிட பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. புதிய உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் புதிய அலுவலக தலைமை அதிகாரியாக (Head of Office) பணியாற்றுவார்கள். அவர்களால் அளிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர பட்டியல்களை சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொள்ளுமாறு அப்பகுதிக்கு உரிய சம்பளக் கணக்கு அலுவலர்கள்/ கருவூல அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

9. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.எண். 29024/கல்வி.II/2007 நாள் 08.05.2007-ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கானக் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 107 (நூற்று ஏழு).

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை-6
மாநில கணக்காயர், சென்னை-18
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்/
கருவூல அலுவலர்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
நிதித் (கல்வி-II) / (வரவு செலவு I & II) துறை,
சென்னை-9
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை,சென்னை-9
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை-9
நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை 9
பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அலுவலகம், சென்னை-9
செயலாளரின் நேர்முக உதவியாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித் (வரவு-செலவு) துறை, சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.